**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் பகுதியில் உள்ள பாம்பூரி வாய்க்கால் அருகில் பாலம் வேலைக்கு இடையூறாக உள்ள மின்கம்பத்தை (E.B Pole No. C118) மாற்றுவதற்கு பதிவு கட்டணம் ரூ.5.90/-ம் ,மதிப்பீட்டு கட்டணம் ரூ.14,770/-ம் தமிழ்நாடு மின்வாரியம், குளச்சல் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.இ2/1764/2009

**தீர்மானம் எண்.2131 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் : 2019-2020-ன் கீழ், ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு பணிகள் தேர்வு செய்து நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள் 03.09.2019-ல் மேற்காணும் பிரேரணை அடிப்படையில் கீழ்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு / நில அபிவிருத்தி கட்டணம் (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| குளச்சல் | 1.00 | 0.35 | 0.45 | 0.20 |

எனவே மேற்காணும் நிதி ஓதுக்கீட்டின் அடிப்படையில் கீழ்காணும் சாலைகளில் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்க கேட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் சமர்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

பணிகள் விவரம்

| வ. எண். | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.1-ல் பவுண்டரி சாலை, வார்டு எண்.2-ல் சி.எம்.சி சாலை மற்றும் புதுத்தெரு ஆகியவற்றில் தார் சாலை அமைத்தல் | 100.00 |

ந.க.எண்.1120/2019/இ1

**தீர்மானம் எண்.2132 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில், சி.எஸ்.ஐ ஆலயம் முன்பகுதியில் சூரிய ஒளி மின்சக்தியில் இயங்கும் சிறிய கோபுர மின் விளக்கு அமைத்தல் பணிக்கு 17.08.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.N.நவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.23% குறைவு (ரூ.3,25,130/-) |
| 2 | M/s. Success Eng Paliyoorsalai, Mancode (p.o) | மதிபீட்டை விட 0.78% குறைவு (ரூ.3,23,340/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.SuccessEngg.Puliyoorsalai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.78% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1494/2018/இ1

**தீர்மானம் எண்.2133 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில், துறைமுகப்பாலம் அருகில் சூரிய ஒளி மின்சக்தியில் இயங்கும் சிறிய கோபுர மின் விளக்கு அமைத்தல் பணிக்கு 17.08.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.N.நவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.23% குறைவு (ரூ.3,25,130/-) |
| 2 | M/s. Success Eng Paliyoorsalai, Mancode (p.o) | மதிபீட்டை விட 0.78% குறைவு (ரூ.3,23,340/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.SuccessEngg.Puliyoorsalai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.78% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1494/2018/இ1

**தீர்மானம் எண்.2134 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

இந்நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகம் அருகில், மின்கலத்தில் இயங்கும் வாகனங்களை நிறுத்துமிடத்திற்கு Gate அமைத்தல் மற்றும் Plug point அமைத்தல் பணியினை ரூ.1,10,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2111 நாள் 13.08.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு, 04.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.94% அதிகம் (ரூ.1,03,059.50/-) |
| 2 | திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிபீட்டை விட 0.11% குறைவு (ரூ.1,00,981.50/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1100-1/2019/இ1

**தீர்மானம் எண்.2135 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

இந்நகராட்சி துறைமுகப்பாலம் அருகில் அமைந்துள்ள நகராட்சி கழிவறையில் பராமரிப்பு பணிகளை ரூ.2,10,000/-மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.2110 நாள் 13.08.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 04.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% அதிகம் (ரூ.2,04,635.50/-) |
| 2 | திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிபீட்டை விட 0.158% குறைவு (ரூ.2,04,128.50/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.15% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.883/2019/இ1

**தீர்மானம் எண்.2136 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் ஓடையில் நாகராஜா கோவில் அருகில் சிறுபாலம் அமைத்தல், தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் சிங்கன்காவு முதல் களிமார் வரை வடிகால் ஓடையில் தூர் வாரி சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை ரூ.5,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2109 நாள் 13.08.2019-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 04.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.72% அதிகம் (ரூ.4,36,447/-) |
| 2 | திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிபீட்டை விட 0.08% குறைவு (ரூ.4,32,908.75/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.783/2019/இ1

**தீர்மானம் எண்.2137 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் உபகரணங்களை ரூ.9,90,000/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2091 நாள் 30.07.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், 04.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Traders, Thazhakusy நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.76% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கமன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.450/2019/இ2

**தீர்மானம் எண்.2138 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சியில் உதவி திட்ட அமைப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.S.ராபின் சுந்தர் சிங், புளியங்குடி நகராட்சியில் உதவி திட்ட அமைப்பாளர் (பொ) பணியிடத்தில் பணிபுரிந்த உதவி திட்ட அமைப்பாளராக பதிவி உயர்வுடன் கூடிய பணியிட மாறுதல் பெற்று கடந்த 25.05.2018-ல் பணியில் சேர்ந்த போது பணியிட மாறுதல் பயணப்படி தொகை ரூ.10,000/-ஐ வழங்க கேட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.130/2010/இ1

**தீர்மானம் எண்.2139 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

குளச்சல் நகராட்சியில் 2018-19-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1921/2002/சி1

**தீர்மானம் எண்.2140 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சி 2018-2019-ம் ஆண்டிற்கு அரையாண்டு தணிக்கை மேற்கொண்ட புத்தகங்கள் கணணியில் தயார் செய்து பைண்டிங் செய்து கொடுத்த வகையில் ரூ.4540/- மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண்.942/2012/சஎச்1

**தீர்மானம் எண்.2141 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி லாரி TN-74-T-5508 வாகனத்திற்கு 2019-20 ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று பெறுவதற்கு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,25,000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண்.2142 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள பாயிலர் ஸ்டவ் உடனடியாக தேவை என்பதால் அவசர அவசியம் கருதி பழுது சரி செய்யப்பட்டதன் அடிப்படையில் ரூ.2600/- அ1 எழுத்தர் (திரு.க.டென்னிஸ்) என்பவரால் செலவு செய்யப்பட்டது. மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.117/2015/அ1

**தீர்மானம் எண்.2143 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்த ஜூலை 2019 முதல் செப்டம்பர் 2019 வரை 89 நாட்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.2058 நாள் 28.06.2019 ஒப்புதல் பெற்று பணியமர்த்தப்பட்டுள்ளது. மேலும் 17 DBC பணியாளர்களை அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை 89 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016 நாள் 11.02.2018 இல் தெரிவித்துள்ள தினக்கூலி பட்டியலின்படி 89 நாட்களுக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில் அவசர அவசியம் கருதி கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.380000/- மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2144 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை பகுதியில் கதவு எண்.3-30B-ல் செயல்பட்டு வருகின்ற Assemblies of God church என்ற கட்டிடத்தின் மராமத்து பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அக்கட்டிடத்தின் உரிமையாளர் திரு.S.கிறிஸ்டோபர் என்பவர் WP(MD) No.12164-19-ன் படி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நகராட்சி ஆணையாளர் மீது தொடர்ந்த வழக்கிற்கு நகராட்சி சார்பில் இவ்வழக்கினை ஏற்று நடத்திய வகையில் வழக்குக்கட்டணம் ரூ.10,000/- வழங்குமாறு வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி வழக்கின் Contempt Petiotion No.968/2019-ற்கு நகராட்சி சார்பில் வக்காலத்து தாக்கல் செய்து ஆஜரான வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இவ்விரு வழக்குகளுக்கும் நீதிமன்றத்தில் ஆஜராகி நகராட்சி சார்பில் ஏற்று நடத்திய வகையில் ஆன செலவுத் தொகை ரூ.20,000/- வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழங்குவதற்கு நகர்மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.111/2015/TPI

**தீர்மானம் எண்.2145 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தற்போது 19 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மின்வெட்டு காலங்களில் ஜெனரேட்டர் பயன்படுத்தி மின்மோட்டாரை இயக்கி குடிநீர் வினியோகம் சீராக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 200 KVS, 62.5 KVA களில் உள்ள Battery தற்போது பழுதடைந்து உள்ளது. எனவே மேற்கண்ட ஜெனரேட்டர்களை இயக்க முடியாத நிலை உள்ளது.எனவே குடிநீரின் அவசர அவசியம் கருதி 200 KVA, 62.50 KVA ஆகிய இரண்டு Genset களுக்கும் புதிய Battery கள் 150 Ah Battery கள் 150 Ah Battery ல் 2 எண்ணம் 100 Ah Battery ல் 1 எண்ணம் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.43,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/1269/2019

**தீர்மானம் எண்.2146 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களின் வேலைக்கு தேவையான தளவாடப் பொருட்கள் பாதுகாப்பு உபகரணங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கீழ்காணும் பொருட்கள் வாங்க உத்தேச செலவு தொகை ரூ.220000/- மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

1. கையுறை - 80 ஜோடி
2. தலைகவசம் - 40 எண்கள்
3. ஷீஸ் - 40 ஜோடி
4. முககவசம் - 80 எண்கள்
5. மழைகோட் - 40 எண்கள்
6. ஒளிரும் சட்டை - 40 எண்கள்
7. டார்ச் லைட் - 20 எண்கள்

ந.க.எண்.எச்1/1388/2009

**தீர்மானம் எண்.2147 அங்கீகரிக்கப்பட்டது.**